1973 மார்ச் 27]

தொழிலாளர் வேலை நிறுத்தங்களினால் "சிம்சன் குரூப்" கம்பெனிகளின் உற்பத்தியில் இழப்பு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் காரணமாக 1971 ஆம் ஆண்டில் 'ஸிம்ப்ஸன் குரூப்' கம்பெனிகளின் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1971 ஆம் ஆண்டில் வேலைநிறுத்தங்கள், தொழிலாளர்களுக்குள் நடந்த மோதல்கள் காரணமாக ஏற்பட்ட ஏனைய பணிநிறுத்தங்கள் ஆகியவற்றினால் ஏற்பட்ட உற்பத்தி இழப்பின் மதிப்பு ஏறக்குறைய ரூ. 5 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

Labour Trouble at Saravanabhava Cotton Waste Factory at Tirupur

* 284 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there was any labour trouble at Saravanabhava Cotton Waste Factory at Tirupur in Coimbatore District about November 1972; and

(b) if so, the details thereof?

திருப்பூரிலுள்ள சரவணபவா கழிவுப் பருத்தித் தொழிற்சாலையில் தொழில் தகராறு

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் அளவில், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரிலுள்ள சரவணபவா கழிவுப் பருத்தித் தொழிற்சாலையில் தொழில் தகராறு ஏதும் நடைபெற்றதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் உள்ள சரவண பவா (தனியார்) ஆலைத் தொழிலாளர்கள் 27 பேரில் 25 பேர் 1971–72-ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை வழங்குவது குறித்து 13-11-1972 அன்று 1½ மணி நேரமும் மீண்டும் 17-11-1972-லிருந்து 20-11-1972 வரையிலும் வேலைநிறுத்தம் செய்தனர். கோயம்புத்தூர், தொழிலாளர் நல உதவி ஆணையாளர் தலையிட்டதன் பேரில், தொழிலாளர்கள் 21-11-1972 அன்று மீண்டும் வேலைக்குச் சென்றனர். 8-1/3 சதவீத ஊதியக் கொடை வழங்கவேண்டுமென்ற கோரிக்கையின் மேல் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 25-11-1972 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : **வினுக்கள்-விடைகள்** முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கை, உணவுக் கொள்கை பற்றிய விளக்கக்குறிப்பு ஆகிய இரண்டின் மீதும் விவாதம் நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சட்ட மன்ற மேலவை விதிகளின் 80-ஆவது விதியின் கீழ், 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை விவர அறிக்கை மீதான விவாதம் நடத்த ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத நேரத்தையும், எஞ்சியுள்ள நேரத்தை உணவுக் கொள்கை பற்றிய விளக்கக்குறிப்பின்மீது விவாதம் நடத்தவும் நான் வரையறுத்திருக்கிறேன். எனவே காலவரையறைக்குள் சுருக்கமாக விவாதத்தினை முடித்துக்கொள்ள ஒத்துழைக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.